


சென்னை 'மியாட்' மருத்துவமனை மற்றும் 'பிங்கத்தான்' சார்பில், புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும்விதமாக நடைபெற்ற ஓட்டப்பந்தயத்தில் கலந்து கொண்ட பெண்களை படத்தில் காணலாம். போட்டியை தொடங்கி வைத்த டாக்டர் மோகன்தாஸ், மல்லிகா மோகன்தாஸ், பிரித்திவி மோகன்தாஸ், நடிகர் மிலின்ட் சோமன் ஆகியோர் உள்படத்தில் உள்ளனர்.

### புற்றுநோய் குறித்த விழிப்புணர்வு:

# சென்னையில் பெண்கள் பங்கேற்ற ஓட்டப்பந்தயம்

## மியாட் மருத்துவமனை ஏற்பாடு

சென்னை, ஏப்.15–

சென்னை 'மியாட்' மருத்துவமனை மற்றும் 'பிங்கத்தான்' சார்பில், புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக பெண்கள் பங்கேற்கும் ஓட்டப்பந்தயம் நடைபெற்றது

### புற்றுநோய் விழிப்புணர்வு

சென்னை 'மியாட்' மருத்துவமனை மற்றும் 'பிங்கத்தான்' சார்பில், புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக சென்னை தீவுத்திடலில் இருந்து கலங்கரை விளக்கம் வரை ஓட்டப்பந்தயம் நடைபெற்றது. சென்னை தீவுத்திடலில் இருந்து கலங்கரை விளக்கம், தீவுத்திடலில் இருந்து விவேகானந்தர் இல்லம் மற்றும் உழைப்பாளர் சிலை என முறையே 10 கி.மீ., 5 கி.மீ, 3 கி.மீ., என்று 3 விதமாக ஓட்டப்பந்தயம் நடந்தது.

மியாட் மருத்துவமனை நிர்வாக இயக்குனர் டாக்டர் பி.வி.ஏ.மோகன்தாஸ், தலைவர் மல்லிகா மோகன்தாஸ், இணை நிர்வாக இயக்குனர் பிரித்திவி மோகன்தாஸ் மற்றும் மிலின்ட் சோமன் ஆகியோர் இந்த ஓட்டப்பந்தயத்தை கொடி அசைத்து தொடங்கி வைத்தனர்.

### பெண்களின் உடல்நலன்

ஓட்டப்பந்தயத்தை கொடி அசைத்து தொடங்கி வைத்த மிலின்ட் சோமன் கூறும் போது, 'நாட்டில் நம் சமுதாயத்தில் பெண்கள் அனைவரும் தங்களின் உடல்நலனை பற்றி விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். இதற்காக சென்னையில் இந்த ஓட்டப் பந்தயத்தை நடத்த திட்டமிட்டு டாக்டர் பிரித்திவி மோகன்தாஸை அணுகினோம். அவர் முழு ஆதரவு மற்றும் ஒத்துழைப்பு கொடுத்தார்' என்றார். மியாட் மருத்துவமனை இணை நிர்வாக இயக்குனர் டாக்டர் பிரித்திவி மோகன்தாஸ் கூறியதாவது:–

### புற்றுநோயை குணப்படுத்த முடியும்

புற்றுநோய் என்பது குணப்படுத்த முடியாத நோயல்ல என்பதை நாம் அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும். புற்றுநோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து சிகிச்சை எடுத்துக்கொண்டால் இந்த நோயை அறவே குணப்படுத்த முடியும்.

பெண்கள் அனைவரும் முழு உடல் தகுதியுடன் தங்களின் உடல் நலனை பற்றிய விழிப்புணர்வுடன் இருந்த நம் சமுதாயத்திற்கு பெருமை தேடித்தர வேண்டும். சென்னை மியாட் மருத்துவமனை சார்பாகவும், பிங்கத்தான் சார்பாகவும் ஓட்டப்பந்தயத்தில் கலந்து கொண்ட பெண்களுக்கு நன்றி கூறுகிறேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

3 கி.மீ., 5 கி.மீ., 10 கி.மீட்டர் ஓட்டங்களில் 3 இடங்களை தட்டிச்சென்ற பெண்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.